**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்:** 530 **நாள்:** 01.10.2026

**இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்ட மற்றும் தகுதிவாய்ந்த இளைஞர்கள் / முதன்முறை வாக்காளர்களின் பெயர்களை பதிவு செய்வதற்கு சென்னை தேர்தல் மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.**

**மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

இந்திய தேர்தல் ஆணையமானது தனது 29.09.2026-ல் தெரிவித்த கடிதத்தின் வாயிலாக, சிறப்புத் தீவிர திருத்தப் பணி (SIR) ஏற்கனவே நிறைவடைந்த மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, தொடர் திருத்த நடைமுறையின் கீழ், விடுபட்ட வாக்காளர்கள் மற்றும் இளம் / முதல் முறையாகத் தகுதி பெறும் வாக்காளர்களை பதிவு செய்வதற்கான சிறப்பு முகாமினை தலைமைத் தேர்தல் அதிகாரி, மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் வாக்காளர் பதிவு அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும். மேலும், படிவம் 6-உடன் இணைக்கப்பட்டுள்ள "உறுதிமொழிப் படிவம்" (Declaration Form), சிறப்புத் தீவிர திருத்த (SIR) காலக்கட்டத்தில் மட்டுமே பயன்படுத்தப்படும். சிறப்புத் தீவிர திருத்தம் அல்லாத காலக்கட்டங்களில், வாக்காளர் பதிவு விதிகள் 1960-ன்படி பொருந்தக்கூடிய படிவங்கள் பயன்படுத்தப்படும்.

இது தொடர்பாக, இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்ட மற்றும் தகுதிவாய்ந்த இளைஞர்கள் / முதன்முறை வாக்காளர்களின் பெயர்களை பதிவு செய்வதற்கு சென்னை தேர்தல் மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

மேற்கண்ட தகவலை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**

**GREATER CHENNAI CORPORATION**

**PRESS RELEASE**

**P.R.No. 530** **Date : 01.10.2026**

The Election Commission of India, vide its communication dated 29.09.2026, has directed that in States/UTs where the Special Intensive Revision (SIR) has already been completed, a special drive shall be undertaken by the Chief Electoral Officer, District Election Officers and EROs for the enrollment of left out and young/first time eligible electors under the process of continuous updation. Declaration Form attached with Form 6 will be used during SIR phase only. For non-SIR period, the Forms applicable as per the Registration of Electors Rules 1960 will be used.

As per the instructions of the Election Commission of India, a special drive will be undertaken across all Assembly Constituencies in respect of Chennai Election District for the enrollment of left out and young / first time eligible electors.

**Issued by : Joint Director/Public Relations Officer**
**Greater Chennai Corporation**